**செய்தி வெளியீடு எண்: 160** **நாள்: 02.03.2018**

**செய்தி வெளியீடு**

**02.03.2018** மாலை **5** மணிக்கு தலைமைச் செயலரின் கூட்ட அரங்கில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான ஆய்வு கூட்டம் மாண்புமிகு மீன்வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்ததுறை அமைச்சர் திரு டி. ஜெயக்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மத்திய நிதித்துறைச் செயலாளரும் GST கவுன்சிலின் செயலாளருமான திரு ஹஸ்முக் ஆதியா மற்றும் தலைமைச் செயலாளரும் கலந்து கொண்டனர். மாநில நிதித்துறை செயலாளர் , வணிக வரி மற்றும் பதிவுத்துறை செயலாளர், திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு செயலாக்கம் துறை செயலாளர், தமிழ்நாட்டிற்கான சுங்கவரி ஆணையர் மற்றும் துறையின் இதர உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். 01.07.2017 முதல் மாநிலத்தில் GST நடைமுறைப்படுத்திய பின்பு மாநிலத்தில் அதன் செயலாக்கம் குறித்து இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின் கீழான வரி வசூல் குறித்தும் மற்றும் மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய இழப்பீட்டுத் தொகை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**